வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 2/2019

வழக்கு சாட்சி LW7 / PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சத்துருகான் | ஜாதி | |
| கணவர்/தந்தை | கோலக் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 48 |

தேதி 05.05.2025

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் பொன்னேரி, ஜகதாபுரம் பகுதியில் குடியிருந்து வருகிறேன். 2013ம் ஆண்டு தேதி, மாதம் தெரியவில்லை. அதிகாலை 4.30 மணியளவில் ஜகதாபுரத்தில் இருந்து கோயம்பேடு மார்க்கெட்டிருக்கு காய்கறி வாங்க தினமும் விபத்து நடந்த குட்டியானையில் தான் தினமும் செல்வதுபோல் அன்றும் சென்றேன். அவ்வாறு செல்லும்போது, புழல் கேம்பில் ஒருவரை ஏற்றிக்கொண்டு சற்று வண்டி பாலம் அருகே செல்லும்போது பின்னால் வந்த ஈச்சர் லாரி தண்ணீர் லோடுடன் வந்தது வேகமாக எங்களது வண்டியின் பின்னால் மோதியதில் இரண்டு வண்டிகளுமே கவிழ்ந்து விழுந்து விட்டது. அதில் எனக்கு எனது பின்பகுதியின் இடுப்பிற்கு கீழ் அடிபட்டுவிட்டது. எத்தனை பேர் இறந்தார்கள், காயமுற்றார்கள் என்பது எனக்கு தெரியாது. ஒரு 10 நபர்கள் இருந்தார்கள். லாரி டிரைவரை நான் பார்க்கவில்லை. நான் எனது ஊருக்கு சென்று பொன்னேரி மருத்துவமனையில் சிகிச்சை பார்த்தேன். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

குறுக்கு விசாரணை

நான் காய்கறி கடை வைத்துள்ளேன் என்றால் ஆமாம். நான் சென்ற வாகனம் காய்கறி ஏற்றும் வாகனம் என்றால் ஆமாம். பின்னால் 10 நபர்கள் காலியான பகுதியில் அமர்ந்து இருந்தோம் என்றால் ஆமாம். விபத்து புழல் பைபாஸ் ரோட்டில் நடந்தது என்றால் ஆமாம். ஆட்களை ஏற்ற வேண்டும் என்றால் சர்வீஸ் ரோட்டிற்கு வந்து ஆட்களை ஏற்றிவிட்டுதான் மெயின் ரோட்டிற்கு செல்ல வேண்டும் என்றால் ஆமாம். அதிகாலை

என்பதால் தூங்கிகொண்டு செல்வோம் என்றால் ஆமாம். சிலர் தூங்குவார்கள். நான் சத்தம் கேட்டுதான் பார்த்தேன் என்றால் இல்லை. வண்டி வந்து வேகமாக மோதும்போது பார்த்தேன். பைபாஸ் ரோட்டில் ஆட்களை நிறுத்தி ஏற்றக்கூடாது என்றாலும், அவ்வாறு ஏற்றும்போதுதான் விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. லோடு ஆட்டோவில் பொருட்களைதான் ஏற்றவேண்டும் என்றாலும், ஆட்களை ஏற்றக்கூடாது என்றாலும், 10 நபர்கள் சென்றதுதான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. இறந்த நபர்களுக்கு இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
**மறுவிசாரணை இல்லை.**